ஆறு தன்மைகளின் சிறப்பு

தங்கம், வெள்ளிக்கு சிறப்பு
உணவுப் பொருளைக் கொண்டு

உணவுப் பொருளுக்கு சிறப்பு
உடல் சுகத்தைக் கொண்டு

உடல் சுகத்திற்கு சிறப்பு
உடலில் உயிர் இருப்பதைக் கொண்டு

உயிருக்கு சிறப்பு
ஈமான் இருப்பதைக் கொண்டு

ஈமானின் சிறப்பு
தொழுகை மற்றும் அமல்களைக் கொண்டு

அமல்களுக்கு சிறப்பு
இல்மு திக்ரைக் கொண்டு

இல்மு திக்ருக்கு சிறப்பு
நற்குணத்தைக் கொண்டு

நற்குணத்தின் சிறப்பு
அல்லாஹ்வுக்காகவே செயல்படும்
செயல்களைக் கொண்டு (இக்லாஸ்)

இக்லாஸின் சிறப்பு
தக்வா ஏற்படுவதைக் கொண்டு

தக்வா எவ்வாறு ஏற்படும் ?
தஃவத்தைக் கொண்டு

இம்மை, மறுமை வெற்றிக்கு

ஆறு தன்மைகள்

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர் ரஹீம்

கலிமா, தொழுகையை எடுத்துக் கொண்டு,
இல்மே இலாஹி, திக்ரே இலாஹியுடன்,
தன்னுடைய உரிமைகளை மன்னித்து
பிறருடைய கடமைகளை நிறைவேற்றியவாறு,
அல்லாஹ்வின் பொருத்தத்தைப் பெற
தனது உயிரையும் பொருளையும்
எடுத்துக் கொண்டு, ஊர் ஊராக,
தெருத் தெருவாக நாடு நாடாக,
அல்லாஹ் ஹிதாயத் தந்தால்
இன்ஷா அல்லாஹ் முழு உலகிலும் சுற்றுவோம்.

தொகுத்தவர்
மௌலவி ஹாபிழ் முப்தீ
முஹம்மது ஜுபைர் காஸிமீ

வெளியீடு
அன்னை ஹாஜிரா பெண்கள் அரபி பாடசாலை

தெருவுக்கு ஓர் அரபி பாடசாலை அமைப்போம்!
அல்லாஹ்வின் கட்டளையை வாழ்க்கையின் முறையாக்குவோம்!
அல்லாஹ்வின் பக்கம் மக்களை அழைப்போம்!
நபிவழியை நம் வாழ்க்கையின் வழிமுறையாக்குவோம்!

ப.எண்.1/2, பு.எண்.3, மதுரை வாசல் தெரு,
ஏழுகிணறு, சென்னை – 600 001.

பஜ்ர் தொழுகையின் சிறப்பு

(நபியே!) சூரியன் சாய்ந்ததிலிருந்து இரவின் இருள் சூழும் வரையில் (லுஹர், அஸர், மக்ரிப், இஷா ஆகிய நேரத் தொழுகைகளைத் தொழுது வாரும் இன்னும் பஜ்ர் தொழுகையையும் தொழுதுவாரும் (ஏனென்றால்) நிச்சயமாக பஜ்ர் தொழுகையானது மலக்குகள் கலந்து கொள்ளும் தொழுகையாகும்.

(அல்குர்ஆன் பனீஇஸ்ராயீல் - 78)

சுப்ஹுத் தொழுகையை ஜமாஅத்தாகத் தொழுதவர் அல்லாஹுத் தஆலாவின் பாதுகாப்பில் வந்துவிடுவார். அல்லாஹுத் தஆலாவின் பாதுகாப்பில் வந்து விட்டவருக்கு நோவினை தருபவரை அல்லாஹுதஆலா முகங்குப்புற நரகில் எறிவான் என்று நபி (ஸல்) அவர்கள் நவின்றதாக ஹஜ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். *(நூல் : தப்ரா மஜ்மஉஸ்ஸவாயித்)*

இஷாத் தொழுகையை ஜமாஅத்துடன் தொழுதவர் பாதி இரவு வணங்கியவரைப் போன்றவர் ஆவார். பஜ்ரு தொழுகையையும் ஜமாஅத்துடன் தொழுதவர் முழு இரவும் வணங்கியவரைப் போன்றவர் ஆவார் என்று ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அருளியதாக ஹஜ்ரத் உஸ்மானிப்னு அப்ஃபான் ரலி அவர்கள் அறிவிக்கிறார்கள். *(நூல் : முஸ்லிம்)*

எவர் பரிபூரணமாக உளூச் செய்து பர்ளு தொழுகைக்காக நடந்து சென்று ஜமாஅத்துடன் பள்ளி வாசலில் தொழுவாரோ, அவருடைய பாவங்களை அல்லாஹுதஆலா மன்னித்து விடுவான் என நபி (ஸல்) அவர்கள் கூறத் தான் கேட்டதாக ஹஜ்ரத் உஸ்மானிப்னு அஃபான் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

(நூல் : முஸ்லிம்)

இருள்களில் அதிகமாக பள்ளிவாசலுக்குச் செல்வோருக்கு நியாயத் தீர்ப்பு நாளன்று பூரணமான ஒளி கிடைக்கும் என்று நற்செய்தியை கூறிவிடுங்கள் என்று நபி (ஸல்) அவர்கள் அருளியதாக ஹஜ்ரத் புரைதா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். *(நூல் : அபூதாவுத்)*

சூரிய உதயத்திற்கு முன்பும் சூரியன் மறைவுக்கு முன்பும் அதாவது பஜ்ரும், அஸரும் தொழுபவர் நரகத்தில் நுழையமாட்டார் என்று நபி (ஸல்) அவர்கள் அருளியதாக ஹஜ்ரத் ருவையா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். *(நூல் : முஸ்லிம்)*

ஆறு நம்பர்கள்
அதாவது ஆறு தன்மைகள்

அல்லாஹுத்தஆலா முழு மனித சமுதாயத்தின் ஈருலக வெற்றியையும் பரிசுத்தமான தீனில்தான் வைத்துள்ளான்.

யாருடைய வாழ்க்கையில் தீன் இருக்குமோ, அவர் இவ்வுலகிலும் மறுவுலகிலும் வெற்றி பெறுவார்.

யாருடைய வாழ்க்கையில் தீன் இருக்காதோ, அவர் இவ்வுலகிலும் மறுவுலகிலும் தோல்வி அடைவார்.

தீன் என்றால் என்ன?

அல்லாஹ்வின் கட்டளையை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வழிமுறையில் நிறைவேற்றுவதாகும்.

இந்த தீனை உழைப்பில்லாமல் அடைந்துகொள்ள முடியாது.

தீனை கற்று அறிந்த உலமாக்கள் ஆறு தன்மைகளைக் கூறியுள்ளார்கள். அவற்றின் மீது நாம் தொடர்ந்து உழைப்போமேயானால், முழு தீனும் நம் வாழ்க்கையில் வருவது எளிதாகிவிடும்.

அவை வருமாறு

1) கலிமா, 2) தொழுகை, 3) இல்ம்-திக்ரு, 4) இக்ராம் (முஸ்லீமீன்), 5) இக்லாஸுந் நிய்யத், 6) தஃவத்தே இலல்லாஹ்

ஒரு நிபந்தனை:

இந்த ஆறு தன்மைகளும் நம் வாழ்க்கையில் வருவதற்கும், நிலைத்து இருப்பதற்கும், இம்மை, மறுமைக்குத் தேவையில்லாத விஷயங்களைவிட்டும் விலகியிருக்க வேண்டும்.

முதலாவது தன்மை கலிமா தய்யிபா

நோக்கம் :

படைப்புகளால் ஆகுமென்ற தவறான நம்பிக்கையை உள்ளத்திலிருந்து எடுத்துவிட்டு, படைத்த அல்லாஹ்வினால் தான் ஆகுமென்ற சரியான நம்பிக்கையைக் கொண்டு வர வேண்டும். மேலும்,

யாருடைய வாழ்க்கையைப் பின்பற்றினாலும் வெற்றியில்லை. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய வாழ்க்கையைப் பின்பற்றுவதில் தான் நூற்றுக்கு நூறு முழுமையான வெற்றியிருக்கிறது என்ற நம்பிக்கையையும் உள்ளத்தில் கொண்டு வரவேண்டும்.

சிறப்பு :

''ஏழுவானங்கள், ஏழு பூமிகளை தராசின் ஒரு தட்டிலும் இந்தக் கலிமாவை மறுதட்டிலும் வைத்தால், கலிமாவின் தட்டுதான் கணத்தால் அதிகரிக்கும்."

''மக்கள் குழப்பத்தில் இருக்கும் பொழுது நபியுடைய ஒரு (சுன்னத்) நடைமுறையைப் பற்றிப்பிடித்துக் கொண்டவருக்கு நூறு ஷஹீதுகளுடைய கூலி கிடைக்கும்."

உழைப்பு :

இந்த கலிமாவின் ஹகீகத் (உண்மைநிலை) நம் வாழ்க்கையில் வர நான்கு விதமான உழைப்புகளைச் செய்யவேண்டும்.

1. உம்மத்திடம் அலைந்து திரிந்து இந்தக் கலிமாவைப் பற்றி தஃவத் தரவேண்டும். நாயகம் ஸல் அவர்களின் சுன்னத்தின் சிறப்புகள் கூறி அதன் பக்கம் அழைப்பு கொடுக்க வேண்டும்.
2. தனிப்பட்ட முறையில் இதைத் தனக்குள் உண்டாக்கிக் கொள்ள பயிற்சி செய்து பழகவேண்டும். அதற்கான வழி, இந்தக் கலிமாவை பற்றி எங்கு பேசப்பட்டாலும் தனக்குத் தேவையென்று கருதி அங்கே அமர்ந்து பேச்சைக் கேட்கவேண்டும். நாயகம் (ஸல்) அவர்களின் சுன்னத்தான ஆதாத் (பழக்க வழக்கம்) இபாதத் (வணக்க வழிபாடு) தாவத் (மக்களை அல்லாஹ்வின் பக்கம் அழைப்பது) 24 மணி நேரமும் நம் வாழ்க்கையில் வருவதற்கு பயிற்சி எடுத்து கொள்ளவேண்டும்.
3. தஃலீம் ஹல்காக்களில் அமர்ந்து கலிமாவின் சிறப்புகளையும் சுன்னத்தின் சிறப்புகளையும் கற்றுக் கொள்ளவேண்டும்.
4. இரவின் தனிமையிலே எழுந்து இக்கலிமாவின் ஹகீகத்தை (உண்மை நிலை) தரும்படி அல்லாஹ்விடம் தொழுது அழுது துஆச் செய்யவேண்டும்.

5. இந்தக் கலிமாவின் ஹகீகத் நம் வாழ்வில் வந்ததற்கான அடையாளம், மறுமையின் சிந்தனையை அதிகரிக்கும்.

இரண்டாவது தன்மை தொழுகை

நோக்கம் :

தொழுகையைப் போல நம் வாழ்க்கை ஆகிவிட வேண்டும். எப்படி நாம் தொழுகையில் அல்லாஹ்வைத் திக்ரு செய்கின்ற, நன்றி செலுத்துகின்ற, வழிபடுகின்ற தன்மைகளோடு இருக்கின்றோமோ அவ்வாறே தொழுகைக்கு வெளியிலுள்ள வாழ்க்கையும் மாறிவிடவேண்டும்.

சிறப்பு :

ஒருவருடைய தொழுகை சரியாகிவிட்டால் அவருடைய எல்லாக் காரியங்களும் சரியாகிவிடும். ஒருவருடைய தொழுகை கெட்டுவிட்டால் அவருடைய எல்லாக் காரியங்களும் கெட்டுப்போய்விடும்.

உழைப்பு :

இந்தத் தொழுகையின் ஹகீகத் (உண்மை நிலை) நம் வாழ்க்கையில் வர நான்குவிதமான உழைப்புகளைச் செய்யவேண்டும்.

1. உம்மத்திடம் சென்று அலைந்து திரிந்து தொழுகையைப் பற்றி தஃவத் தரவேண்டும். தொழாதவர்களைப் பார்த்து இவர் தொழாமல் இருக்கிறாரே என்று மனம் வருந்தவேண்டும்.

2. தனிப்பட்ட முறையில் இதைத் தனக்குள் உண்டாக்கிக் கொள்ள பயிற்சி செய்து பழகவேண்டும். அதற்கான வழி, தொழுகையின் வெளிரங்கத்தையும் உள்ரங்கத்தையும் கற்றுக் கொள்ளவேண்டும்.

   தொழுகையின் வெளிரங்கம் : உளூ செய்து முதல் ஸலாம் கொடுக்கும் வரையுள்ள தொழுகை (இல்மு) நிறைவேறத் தேவையான எல்லா விசயங்களையும் கற்றுக் கொள்ளவேண்டும்.

   உள்ரங்கம் : நாம் அல்லாஹ்வைப் பார்ப்பதைப்போல அல்லது அல்லாஹ் நம்மைப் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்ற உணர்வோடு தொழுவது.

3. தஃலீம் ஹல்காக்களில் அமர்ந்து தொழுகையின் சிறப்புகளைக் கற்றுக் கொள்ளவேண்டும்.

4. இரவின் தனிமையிலே எழுந்து இத்தொழுகையின் ஹகீகத்தை (உண்மை நிலை) தரும்படி அல்லாஹ்விடம் தொழுது அழுது துஆச் செய்யவேண்டும்.

இந்தத் தொழுகையின் ஹகீகத் (உண்மை நிலை) நம் வாழ்க்கையில் வந்ததற்கான அடையாளம் பாவங்களின் மீது வெறுப்பு உண்டாகும்.

✣ ✣ ✣

மூன்றாவது தன்மை இல்ம்-திக்ர்
(கல்வியும் தியானமும்)

நோக்கம் :

இந்த நேரத்திலும் அல்லாஹ் என்னிடம் என்ன விரும்புகிறான் என்பதை அறிந்து கொள்வது இல்மாகும். அதை அமல் செய்வது திக்ராகும்.

1. பஜாயில் இல்ம், 2. மஸாயில் இல்ம்

பஜாயில் இல்முடைய நோக்கம் :

சிறப்புகளைக் கேட்டு நன்மையின் மீது ஆர்வமும் எச்சரிக்கைகளைக் கேட்டு தீமைகளின் மீது வெறுப்பும் உண்டாக வேண்டும்.

மஸாயில் இல்முடைய நோக்கம் :

நமக்குள் ஆராய்ச்சித்திறன் ஏற்படவேண்டும்.

திக்ருடைய நோக்கம் :

அல்லாஹ்வை மறந்த நிலை நீங்கி அல்லாஹ்வை நினைவு கூறும் நிலை உருவாகவேண்டும்.

சிறப்பு :

"மார்க்கக் கல்வியின் ஒரு பாடத்தைக் கற்றுக் கொள்வது ஆயிரம் ரக்அத்துகள் நபில் தொழுவதை விடச் சிறந்ததாகும்."

"எவருடைய நாவு அல்லாஹ்வின் திக்ரிலேயே திளைத்திருக்கிறதோ, அவர் சிரித்தவராகச் சொர்க்கம் செல்வார்."

உழைப்பு :

இல்ம் - திக்ருடைய ஹகீகத் (உண்மை நிலை) நம் வாழ்க்கையில் வருவதற்காக நான்கு விதமான உழைப்புகளைச் செய்ய வேண்டும்.

1. உம்மத்திடம் அலைந்து திரிந்து இல்ம்-திக்ரின் சிறப்புகளை கூறி தஃவத் தரவேண்டும்.
2. தனிப்பட்ட முறையில் இதைத் தனக்குள் உண்டாக்கிக் கொள்ள பயிற்சி செய்து பழகவேண்டும்.

அதற்கான வழி,

இல்முடைய பயிற்சி

தஃலீம் ஹல்காக்களில் அமர்ந்து பஜாயிலைக் கற்று கொள்ளவேண்டும். நம் கொள்கையைச் சார்ந்த நம்பகமான ஆலிம்களை அணுகி மஸாயில் இல்மைக் கற்றுக் கொள்ளவேண்டும்.

திக்ருடைய பயிற்சி

i) காலை, மாலை தஸ்பீஹாத்துகளை பேணுதலாக ஓதுவது.

ii) குர்ஆன் ஓதுவது, அதன் கருத்துகளை அறிவது.

iii) சந்தர்ப்ப துஆக்களை ஓதுவது.

iv) மரணத்தைப் பற்றி அதிகமாக நினைப்பது.

3) தஃலீம் ஹல்காக்களில் அமர்ந்து இல்ம் - திக்ருடைய சிறப்புகளைக் கற்றுக் கொள்ளவேண்டும்.

4) இரவின் தனிமையிலே எழுந்து இல்ம் - திக்ருடைய ஹகீகத்தைத் (உண்மை நிலை) தரும்படி அல்லாஹ்விடம் தொழுது அழுது துஆச் செய்யவேண்டும்.

இல்ம் - திக்ர் நம் வாழ்க்கையில் வந்ததற்கான அடையாளம் சுன்னத்துக்களை பின்பற்றுவதில் அதிகம் பேணுதல் உண்டாகுதல்.

நான்காம் தன்மை இக்ராம் (முஸ்லிம்)

நோக்கம் :

"நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் குணத்தைப் போல நம்முடைய குணமும் மாறிவிடவேண்டும்."

சிறப்பு :

"நற்குணமுள்ளவர் நபியவர்களுக்கு விருப்பமானவராகவும் கியாமத் நாளில் மிக நெருக்கமானவராகவும் இருப்பார்."

உழைப்பு :

இக்ராம் முஸ்லிமுடைய ஹகீகத் (உண்மை நிலை) நம் வாழ்க்கையில் வருவதற்காக நான்குவிதமான உழைப்புகளைச் செய்யவேண்டும்.

1. உம்மத்திடம் சென்று அலைந்து திரிந்து இக்ராம் முஸ்லீமின் சிறப்புகளை கூறி தஃவத் தரவேண்டும்.

2. தனிப்பட்ட முறையில் இதைத்தனக்குள் உண்டாக்கிக் கொள்ள பயிற்சி செய்து பழகவேண்டும். அதற்கான வழி,

i) எல்லோரும் என்னைவிட மேலானவர்கள் என்று கருதி எல்லோரையும் கண்ணியப்படுத்த வேண்டும்.

ii) அவரவருக்குச் செய்யவேண்டிய கடமைகளைச் செய்யவேண்டும்.

iii) பிறருடைய குறைகளை மறைக்கவேண்டும், மன்னிக்கவேண்டும்.

vi) தனக்குத் தேவையிருந்த போதிலும் சகோதரனுடைய தேவைக்கு முன்னுரிமை தரவேண்டும்.

3) தஃலீமுடைய ஹல்காக்களில் அமர்ந்து இக்ராம் முஸ்லிமுடைய சிறப்புகளைக் கற்றுக் கொள்ளவேண்டும்.

4) இரவின் தனிமையிலே எழுந்து இக்ராம் முஸ்லிமின் ஹகீகத்தை (உண்மை நிலையை)த் தரும்படி அல்லாஹ்விடம் தொழுது அழுது துஆச் செய்யவேண்டும்.

இக்ராம் முஸ்லிம் நம் வாழ்க்கையில் வந்ததற்கான அடையாளம்.

தன்னுடைய உரிமைகளை மன்னித்து பிறருடைய கடமைகளை நிறைவேற்றும் பண்பு ஏற்பட வேண்டும்.

ஐந்தாவது தன்மை இக்லாஸுந் நிய்யத்

நோக்கம் :

எந்த அமலைச் செய்தாலும் அதை அல்லாஹ்வுக்காகவே செய்யும் தன்மை ஏற்படவேண்டும்.

சிறப்பு :

இக்லாஸுடன் செய்யப்படும் செயல்களையே அல்லாஹ் ஏற்றுக் கொள்கிறான்.

உழைப்பு :

இக்லாஸுடைய ஹகீகத் (உண்மை நிலை) நம் வாழ்க்கையில் வருவதற்காக நான்குவிதமான உழைப்புகளைச் செய்யவேண்டும்.

1) உம்மத்திடம் சென்று அலைந்து திரிந்து இக்லாஸின் சிறப்புகளைக் கூறி தஃவத் தரவேண்டும்.

2) தனிப்பட்ட முறையில் இதைத் தனக்குள் உண்டாக்கிக் கொள்ள பயிற்சி பெறவேண்டும்.

i) ஒரு காரியத்தைச் செய்ய துவங்கும் போது, செய்து கொண்டிருக்கும் போது, அதை அல்லாஹ்வுக்காகச் செய்யத் துவங்கினேனா? செய்து கொண்டிருக்கிறேனா? செய்து முடித்தேனா? என்று தன் நிய்யத்தை சரிபார்த்துக் கொள்ளவேண்டும்.

ii) இக்லாஸ் உள்ளவர்களுடன் சேர்ந்திருக்க வேண்டும்.

iii) உலகம் நிலையற்றது. மறுமை நிலையானது என்ற விஷயத்தை அடிக்கடி நினைத்துப் பார்க்கவேண்டும்.

பொருள் வரும் போது அதை அல்லாஹ்வின் பாதையில் செலவழிக்கவேண்டும்.

3) தஃலீம் ஹல்காக்களில் அமர்ந்து இக்லாஸின் சிறப்புகளைக் கற்றுக் கொள்ளவேண்டும்.

4) இரவின் தனிமையிலே எழுந்து இக்லாஸின் ஹகீகத்தை (உண்மை நிலையை)த் தரும்படி அல்லாஹ்விடம் தொழுது அழுது துஆச் செய்யவேண்டும்.

இக்லாஸ் நம் வாழ்க்கையில் வந்ததற்கான அடையாளம் புகழ்ச்சியும், இகழ்ச்சியும் சரிசமமாகத் தோன்றும்.

ஆறாவது தன்மை தஃவத்தே இலல்லாஹ்

நோக்கம் :

உம்மத்திலுள்ள ஒவ்வொருவரும் தன்னுடைய உயிரையும் பொருளையும் நேரமும் சரியான வழியில் செலவழிப்பவர்களாக மாறவேண்டும்.

சிறப்பு :

அல்லாஹ்வின் பாதையில் சிறிது நேரம் நிற்பது லைலத்துல் கத்ருடைய இரவில் ஹஜ்ருல் அஸ்வத் கல்லுக்குப் பக்கத்தில் இருந்து இபாதத் செய்வதைவிடச் சிறந்தது.

உழைப்பு :

1) தஃவத்துடைய ஹகீகத் (உண்மை நிலை) நம் வாழ்க்கையில் வருவதற்காக உம்மத்திடம் சென்று அலைந்து திரிந்து தஃவத்தின் சிறப்புகளை கூறி தஃவத் தரவேண்டும்.

2) தனிப்பட்ட முறையில் இதைத் தனக்குள் உண்டாக்கிக் கொள்ள பயிற்சி பெறவேண்டும். அதற்கான வழி,

வாழ்வின் மூன்றிலொரு பகுதியைத் தீனுக்காக ஒதுக்குவது, அல்லது

ஆயுளில் ஒரு தடவை நான்கு மாதம், வருடம் ஒருமுறை சில்லா (40 நாட்கள்), மகாமீ வேலைகள், அதாவது ஐந்து அமல்கள் வாராந்திர இஜ்திமா, தன் ஊருக்கு வரும் ஜமாஅத்துகளுக்கு நுஸ்ரத் முதலிய அமல்களைச் செய்வது.

3) தஃலீமுடைய ஹல்காக்களில் அமர்ந்து தஃவத்துடைய சிறப்புகளைக் கற்றுக் கொள்ளவேண்டும்.

4) இரவின் தனிமையிலே எழுந்து தஃவத்துடைய ஹகீகத்தை (உண்மை நிலையை)த் தரும்படி அல்லாஹ்விடம் தொழுது அழுது துஆச் செய்யவேண்டும்.

தஃவத்துடைய ஹகீகத் (உண்மை நிலை) நம் வாழ்க்கையில் வந்ததற்கான அடையாளம்.

i) சுய சீர்திருத்தம் ஏற்படுதல்.

ii) தர்த்தீபாக வேலை செய்தல்.

iii) தன் உயிரும் பொருளும் அல்லாஹ்வின் அமானிதம் என்று எண்ணுதல்

iv) பிறருக்குக் கற்றுத் தரும் பண்பும் உருவாகுதல்

இந்த ஆறு நம்பர்களின் மூலம் நமக்குக் கிடைக்கும் பலன்களையும் ஒளிகளையும் தக்க வைத்துக் கொள்ளவும் பாதுகாக்கவும் இம்மை, மறுமைக்குத் தேவையில்லாத விஷயங்களில் ஈடுபடக்கூடாது.

✤ ✤ ✤

தனது நம்பிக்கை மற்றும் அமலைச் சரிசெய்யவும். சரியான நம்பிக்கை மற்றும் அமலின் மீது முழு மனித சமுதாயத்தை கொண்டு வரவும் ரஸுலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய வழிமுறையிலான உழைப்பை முழு உலகிலும் நிலைநாட்ட முயற்சி செய்தல்.

ஆறு நம்பரிலுள்ள அற்புதங்கள்

1) கலிமாவின் மூலம் அடிமை என்று ஒப்புக் கொள்கிறோம்.

2) தொழுகையின் மூலம் அடிமை என்பதை வெளிப்படுத்துகிறோம்.

3) இல்மின் மூலம் அடிமையின் வாழ்க்கை முறையைத் தெரிந்து கொள்கிறோம்.

4) இக்ராம் மூலம் அடிமைத்தனம் பரிசோதிக்கப்படுகிறது.

5) இக்லாஸ் மூலம் உண்மையான அடிமைத்தனம் உண்டாகிது.

6) தஃவத் மூலம் அடிமைத்தனத்தின் பக்கம் மற்றவர்களை அழைக்கின்றோம்.

7) தேவையற்றவையை தவிர்த்தல் மூலம் அடிமைத்தனம் பாதுகாக்கப்படுகிறது.

ஜமாத்தில் புறப்படுவதின் நோக்கம் :

1. சுய சீர்திருத்தம்.
2. உம்மத்துடைய சீர்திருத்தம்.
3. போகுமிடங்களில் மஸ்ஜித்வார் அமல்களை உண்டாக்குதல்.
4. ஊரிலுள்ள வயது வந்த ஒவ்வொரு முஃமினையும் சந்தித்து அவரை அல்லாஹ்வின் பாதையில் கிளப்புவதற்கு பாடுபடுதல்.

ஜமாத்தில் பேணவேண்டியவை – 4.

1. பள்ளியின் நான்கு சுவற்றுக்குள் இருத்தல்.
2. அமீருக்குக் கட்டுப்பட்டு நடத்தல்.
3. கண்களை பாவத்தை விட்டும் பாதுகாத்தல்.
4. இரவுகளில் அழுது கண்ணீர் வடித்தல்.

அழைப்பாளனிடம் இருக்க வேண்டியவை – 4.

1. வியாபாரியைப் போன்ற சிந்தனை.
2. விவசாயியைப் போன்ற உழைப்பு.
3. உத்தியோகஸ்தரைப் போன்ற நேரக் கட்டுப்பாடு.
4. அரசனைப் போன்ற கம்பீரம்.

ஜமாத்தில் தடுக்கப்பட்டவை – 4.

1. தர்க்கம், விவாதம் செய்தல்.
2. நாட்டு நடப்புகளைப் பேசுதல்.
3. கருத்து வேறுபாடுள்ள மஸ்அலாக்களைப் பேசுதல்.
4. அரசியல் பேசுதல்.

வாழ்க்கையில் அதிகமான நேரத்தை செலவழிக்க வேண்டியவை – 4.

1. அல்லாஹ்வின் பக்கம் மக்களை அழைப்பது.
2. கற்றுக் கொள்வது கற்றுக் கொடுப்பது.
3. வணக்க வழிபாடு செய்வது.
4. பணிவிடை செய்வது.

வாழ்க்கையில் குறைவான நேரத்தை செலவழிக்க வேண்டியவை – 4.

1. சாப்பிடும் நேரத்தை.
2. தூங்கும் நேரத்தை.
3. சுய தேவையைப் பூர்த்தி செய்யும் நேரத்தை.
4. ஆகுமான பேச்சுக்களையும் குறைத்துப் பேச வேண்டும். (ஆகாத பேச்சை அறவே பேசக்கூடாது).

வாழ்க்கையில் அறவே செய்யக் கூடாதவை – 4.

1. தன் சொந்த பொருளாக இருந்தாலும் வீண் விரயம் செய்யக்கூடாது.
2. அடுத்தவர் பொருள் மீது ஆசைப்படக்கூடாது.
3. யாசகம் கேட்கக் கூடாது.
4. அடுத்தவர் பொருளை அனுமதி இல்லாமல் எடுக்கக் கூடாது.

கூட்டு அமல்கள் – 10.

1.	ரவாங்கி	6.	கஷ்த்
2.	பயணம்	7.	பயான்
3.	மஷ்வரா	8.	சாப்பாடு
4.	தஃலிம்	9.	தூக்கம்
5.	ஜமாஅத் தொழுகை	10.	வாபஸி

தனிப்பட்ட அமல்கள் – 10

1. முதல் தக்பீருடன் ஐவேளை தொழுதல்.
2. தினசரி சுன்னத் முஅக்கதா பன்னிரெண்டு ரக்அத் தொழவேண்டும்.

3. நபில் தொழுகை தொழுதல் தஹஜ்ஜத், இஸ்ராக், லுகா, அவ்வாபீன் மற்றும் நன்றி தெரிவிக்கும் தொழுகை, ஹாஜத் தொழுகை, பாவமன்னிப்பு தொழுகை தினசரி தொழுது கொள்வது.

4. தினசரி குர்ஆன் ஓதுதல்.

5. தினசரி ஓதவேண்டிய அவ்ராதுகள் ஓதுவது அதாவது, சுபுஹுக்குப் பின் யாஸீன், லுகருக்குபின் அர்ரஹ்மான், அஸருக்கு பின் நபா, மஃரிபுக்கு பின் வாக்கியா, தபரக்கல்லதி, ஸஜ்தா சூரா, முஸம்மில் சூரா ஓதிக் கொள்வது.

6. சந்தர்ப்ப துஆக்கள் ஓதுதல்.

7. காலை, மாலை தஸ்பீஹ் ஓதுதல்.

8. தினமும் புதிதாக ஒரு மார்க்க விஷயத்தை கற்று கொள்ளுதல்.

9. களாயே உமரீ கடந்த காலத்தில் விடுபட்ட தொழுகைகளை நிறைவேற்றுதல்.

10. சுய விசாரணை செய்தல்.

தஃலீமுடைய ஒழுக்கங்கள்

நோக்கம் :

இஹ்திஸாப் என்ற தன்மை ஏற்படவேண்டும். அதாவது, அமல் செய்யும் போது அமலுக்குச் சொல்லப்பட்ட நன்மையின் நினைவோடு அமல் செய்வது.

சிறப்பு :

இல்முடைய ஒரு பாடத்தைக் கற்றுக் கொள்வது அதை அந்த நேரத்தில் அமல் செய்தாலும் சரி அமல்

செய்யாவிட்டாலும் சரி அது ஆயிரம் ரக்அத் நபில் தொழுவதை விடச் சிறந்ததாகும்.

உழைப்பு :

1. முஜாஹதாவோடு அமருதல்.
2. உளுவுடன் அமருதல்.
3. மரியாதையுடனும் கண்ணியத்துடனும் அமருதல்.
4. இவையனைத்தும் உண்மைதான் என்ற நம்பிக்கையை மனதில் கொண்டு வருதல்.
5. தானும் இதன்படி அமல் செய்து மற்றவர்களுக்கும் எத்திவைப்பேன் என்ற எண்ணத்துடன் அமருதல்.
6. சாய்ந்து கொண்டு அமரக்கூடாது.
7. இடையில் போசவோ, எழுந்து செல்லவோ கூடாது.
8. சுயவிளக்கம் கூடாது.
9. படிப்பவர் கேட்பவர் முகத்தையும் கேட்பவர் படிப்பவர் முகத்தையும் பார்த்தல்.

மஷ்வராவின் அடிப்படை நான்கு

1. நம்முடைய 24 மணிநேரமும் சரியான முறையில் கழியவேண்டும்.
2. மஸ்ஜித்வார் அமல்களை பலப்படுத்துவது, இல்லையானால் ஏற்படுத்துவது.
3. குறைந்தது மூன்று நாள் ஜமாஅத்தையாவது அந்த ஊரிலிருந்து கிளப்புவது.
4. ஊரில் உள்ள ஒவ்வொரு ஆண்களிடத்திலும், பெண்களிடத்திலும் நூற்றுக்கு நூறு அல்லாஹ்வுடைய

கட்டளை, நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வாழ்க்கை வழிமுறை வருவதற்கு பாடுபடவேண்டும்.

நோக்கம் :

1. அல்லாஹ்வின் கட்டளை
2. நபி வழிமுறை
3. ஒருமித்த சிந்தனை
4. ஒருங்கிணைந்த உள்ளம்

சிறப்பு :

மஷ்வராச் செய்து செயல்படுபவர் கைசேதப்படமாட்டார்

வஹீக்கு பதிலாக உம்மத்துக்கு ஒரு நிஃமத்.

உள்ளங்கள் ஒன்றுபடும்.

வேலைகள் பங்கிடப்படும்.

ஏற்றுக் கொள்ளப்படுகின்ற தன்மை ஏற்படும்.

உழைப்பு :

1. மஷ்வராவில் எது முடிவு செய்யப்பட்டாலும், அதில் அல்லாஹ் நன்மையையே ஏற்படுத்துவான் என்ற நம்பிக்கை வேண்டும்.
2. நபியவர்களுக்கு வஹீ இறங்கிக் கொண்டிருந்தும் மஷ்வராச் செய்யும்படி அல்லாஹ் கட்டளையிட்டுள்ளான். எனவே மஷ்வராச் செய்வது அல்லாஹ்வின் கட்டளை என்று விளங்கிச் செய்யவேண்டும்.
3. ஒருவரைப் பற்றி அபிப்ராயம் தரும்போது அவரைப் பற்றி நன்கு அறிந்திருக்கவேண்டும்.

4. கவனத்தோடு அமர்ந்து எந்த விஷயத்தைப் பற்றி அபிப்ராயம் கேட்கப்படுகிறதோ அதற்குரிய அபிப்ராயத்தையே சொல்லவேண்டும்.
5. பிறருடைய கருத்தைத் துண்டிக்கும் விதமாக அபிப்ராயம் சொல்லக்கூடாது.
6. சுய நலத்தோடு அபிப்ராயம் சொல்லக்கூடாது.
7. முழு உம்மத்திலும் முழுமையான தீன் வரவேண்டும். அதற்காக முழு உம்மத்தும் தன் உயிர், பொருளைத் தியாகம் செய்யத் தயாராகி விடவேண்டும். இதுவே நமது மஷ்வராவின் குறிக்கோள். எனவே மஷ்வராவில் எது முடிவானாலும் அதற்காக நமது உயிரும் பொருளும் தயாராக இருக்கவேண்டும்.
8. மஷ்வராவுக்குக் கட்டுப்படுவதால் இதாஅத் (வழிபடக் கூடிய தன்மை) உருவாகிறது.
9. சாத்திகள் ஒவ்வொருவரிடமும் அபிப்ராயம் கேட்கப்பட வேண்டும்.
10. தீனுடைய பலனை முன் வைத்து அபிப்ராயம் சொல்ல வேண்டும்.
11. எந்த வேலை கொடுக்கப்பட்டாலும் அமல் செய்வேன் என்ற நிய்யத்துடன் அமரவேண்டும்.
12. மஷ்வராவுக்கு முன் மஷ்வரா இல்லை. மஷ்வராவுக்குப் பின் அதைப் பற்றிய விமர்சனம் இல்லை.

✣ ✣ ✣

அல்லாஹ் நம்மை பாதுகாக்க வேண்டும்.

இந்த ஆறு தன்மைகளில் முயற்சி செய்து வாழ்க்கையில் கொண்டு வரவில்லையானால் எதிர்மறையான விளைவுகளை சந்திக்க நேரிடும். அவை

கலிமா, ஈமானிற்க்கு உழைப்பு முயற்சி இல்லையென்றால்	குப்ரு, ஷிர்க்கு ஏற்படும்.
சுன்னத் நபிவழிக்கு உழைப்பு முயற்சி இல்லையென்றால்	ழளாலத் என்னும் வழிகேடு, குழப்பங்கள் ஏற்படும்.
தொழுகைக்காக உழைப்பு முயற்சி இல்லையென்றால்	பாவங்கள் செய்ய துணிவு ஏற்படும்.
இல்மு மார்க்க அறிவுக்கு உழைப்பு முயற்சி இல்லை யென்றால்	ஜிஹாலத் என்னும் அறியாமை ஏற்படும்.
திக்ரு அல்லாஹ்வின் சிந்தனை இவற்றிற்க்கு உழைப்பு முயற்சி இல்லையென்றால்	கப்ஃலத் என்னும் மறதி ஏற்படும்
இக்ராம் என்னும் நற்குணத் திற்கு உழைப்பு முயற்சி இல்லையென்றால்	ஸுலும் என்னும் அநியாயம் ஏற்படும்
இக்லாஸ் என்னும் அல்லாஹ்வின் பொருத்தத் திற்கு உழைப்பு முயற்சி இல்லையென்றால்	நப்ஸாணியத் என்னும் மனோ இச்சை, முகஸ்துதி பேரும் புகழுக்கும் அடிபணிதல் ஏற்படும்.
தாஃவத் இலல்லாஹ் இவற்றிற்கு உழைப்பு முயற்சி இல்லையென்றால்	அநானியத் என்னும் உயிர், பொருள் நேரம் தன்னுடையது என்று தவறான எண்ணத்தில் செயல்பட நேரிடும்.

மஸ்னூன் துஆக்கள்

வீட்டை விட்டு வெளியேறும் போது

بِسْمِ اللهِ تَوَكَّلْتُ عَلَى اللهِ لَاحَوْلَ وَلَا قُوَّةَ إِلَّا بِاللهِ

பிஸ்மில்லாஹி தவக்கல்து அலல்லாஹி லாஹவ்ல வலா குவ்வத இல்லா பில்லாஹ்!

பொருள் : அல்லாஹ்வின் திருநாமத்தைக் கொண்டு வெளியேறுகின்றேன். இன்னும் அல்லாஹ்வின் மீதே பாரஞ்சாட்டினேன். தீயதை விட்டு பாதுகாத்துக் கொள்வதும் இன்னும் நன்மையைச் செய்ய சக்தி பெறுவதும் அல்லாஹ்வைக் கொண்டேயன்றி வேறில்லை.

எவரொருவர் வீட்டை விடடு வெளியேறும் போது இந்த துஆவை ஓதுவாரோ அவருக்கு மறைவிலிருந்து 'உனது தேவைகள் பூர்த்தியாகும். மேலும் நீ துன்பத்தை விட்டும் நஷ்டத்தை விட்டும் பாதுகாக்கப்பட்டவனாக இருப்பாய்!" என்று அறிவிக்கப்படும். மேலும் "இந்த துஆவைக் கேட்டு ஷைத்தான் அங்கிருந்து தூரம் விலகி விடுகின்றான். ஷைத்தானுடைய ஊசலாட்டங்களை விட்டும் தொந்தரவு அளிப்பதை விட்டும் பாதுகாக்கப்படுவான்" என்று ஹதீஸில் வந்துள்ளது. *(திர்மிதி)*

வீட்டில் நுழையும் போது ஓதும் துஆ

اَللّٰهُمَّ إِنِّي أَسْأَلُكَ خَيْرَ الْمَوْلَجِ وَخَيْرَ الْمَخْرَجِ بِسْمِ اللهِ وَلَجْنَا بِسْمِ اللهِ خَرَجْنَا وَعَلَى اللهِ رَبِّنَا تَوَكَّلْنَا

அல்லாஹும்ம இன்னீ அஸ்அலுக கைரல் மவ்லஜி வ கைரல் மக்ரஜி பிஸ்மில்லாஹி வலஜ்னா பிஸ்மில்லாஹி கரஜ்னா வஅலல்லாஹி ரப்பனா தவக்கல்னா

பொருள் : யா அல்லாஹ்! நல்ல நுழைதலையும் இன்னும் நல்ல வெளியேறுதலையும் நிச்சசயம் நான் உன்னிடம் கேட்கிறேன். அல்லாஹ்வின் திருநாமத்தைக் கொண்டு வெளியேறினோம். இன்னும் எங்களின் இரட்சகனான அல்லாஹ்வின் மீதே பாரஞ்சாட்டினோம்.

இந்த துஆவை ஓதி வலது காலை வீட்டினுள் வைத்து பிறகு வீட்டாருக்கு "அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வ பரகாத்துஹு" என்று சலாம் கூறுக.

நபி (ஸல்) அவர்கள் அருளியதாக ஹஜ்ரத் ஜாபிர் (ரலி) அவர்கள் ரிவாயத்துச் செய்கிறார்கள். மனிதன் தன் வீட்டில் நுழையும் போதும் அல்லாஹ்வின் திக்ரைச் செய்கிறான். சாப்பிடும் போதும் அல்லாஹ்வின் திக்ரைச் செய்கிறான் என்றால் ஷைத்தான் தனது கூட்டாளிகளிடம் "இங்கு இரவிலும் நீங்கள் தங்கமுடியாது அல்லது இவர்களுடைய இரவு உணவில் பங்கு பெறவும் முடியாது" என்று கூறுகின்றான். மாறாக வீட்டில் நுழையும் போது அல்லாஹ்வின் திக்ரைச் செய்யவில்லையானால் ஷைத்தான் தனது கூட்டாளிகளிடம் இங்கு நீங்கள் இரவு தங்குவதற்கான சந்தர்ப்பம் வாய்த்து விட்டது என்கிறான். சாப்பிடும் சமயத்தில் அல்லாஹ்வை தியானிக்கவில்லை என்றால் ஷைத்தான் தனது கூட்டாளிகளிடம் "இங்கு இரவு தங்குவதுடன் உங்களுக்கு உணவும் கிடைத்து விட்டது" என்று கூறுகின்றான்.

(மிஷ்காத்)

மஸ்ஜிதில் நுழையும் போது

வலது காலை மஸ்ஜிதிற்குள் வைத்து,

اَللّٰهُمَّ افْتَحْ لِيْ اَبْوَابَ رَحْمَتِكَ

"அல்லாஹும்ம மப்தஹ்லீ அப்வாப ரஹ்மதிக என" ஓதவும்.

பொருள் : யா அல்லாஹ்! உனது ரஹ்மத்தின் வாயில்களை எனக்கு திறந்து விடுவாயாக!

மஸ்ஜிதில் நுழையும் போது இஃதிகாபின் நிய்யத்து

بِسْمِ اللّٰهِ دَخَلْتُ وَعَلَيْهِ تَوَكَّلْتُ وَنَوَيْتُ سُنَّةَ الْاِعْتِكَافِ

பிஸ்மில்லாஹி தகல்து அலைஹி தவக்கல்து வ நவய்து சுன்னதல் இஃதிகாஃப்.

பொருள் : அல்லாஹ்வின் திருநாமத்தைக் கொண்டு நுழைந்தேன். அவன் மீதே நம்பிக்கை வைத்தேன். இன்னும் இஃதிகாபின் சுன்னத்தை நிய்யத்து வைத்தேன்.

மஸ்ஜிதை விட்டு வெளியேறும் போது

اَللّٰهُمَّ اِنِّيْ اَسْئَلُكَ مِنْ فَضْلِكَ وَرَحْمَتِكَ

அல்லாஹும்ம இன்னீ அஸ்அலு(க்)க மின்பள்லி(க்)க வரஹ்ம(த்)தி(க்)க

பொருள் : அல்லாஹ்வே! எனது பாவங்களை மன்னிப்பாயாக. மேலும் அல்லாஹ்வே! நிச்சயமாக நான் உன்னுடைய பாக்கியத்தை வேண்டியவனாக வெளியேறுகிறேன்.

ஒலுச் செய்ய் ஆரம்பிக்கும் போது

بِسْمِ اللهِ الْعَظِيْمِ وَالْحَمْدُ لِلّٰهِ عَلٰى دِيْنِ الْإِسْلَامِ

"பிஸ்மில்லாஹில் அளீமி வல்ஹம்து லில்லாஹி அலா தீனில் இஸ்லாமி" என்று ஓதுக. சில ஹதீஸ்களில் பிஸ்மில்லாஹ் ஓதாது ஒலு கூடுவதில்லை எனக் கூறப்பட்டு உள்ளது. (மிஷ்காத்)

ஒலுச் செய்த பிறகு வானத்தின் பக்கம் முகத்தை உயர்த்தி இந்த துஆவை ஒதவும்

أَشْهَدُ أَنْ لَا إِلٰهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيْكَ
لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ
اَللّٰهُمَّ اجْعَلْنِيْ مِنَ التَّوَّابِيْنَ وَاجْعَلْنِيْ
مِنَ الْمُتَطَهِّرِيْنَ وَاجْعَلْنِيْ مِنْ عِبَادِكَ
الصَّالِحِيْنَ

அஷ்ஹது அன்லாயிலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீகலஹு வ அஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வரசூலுஹு. அல்லாஹும்ம மஜ் அல்னீ மினத்தவ்வாபீன வஜ் அல்னீ மினல் முத தஹ்ஹிரீன வஜ் அல்னீ மின் இபாதிகஸ் ஸாலி ஹீன்.

படுக்கைக்கு செல்லுமுன்

اَللّٰهُمَّ بِاسْمِكَ أَمُوْتُ وَأَحْيٰى

அல்லாஹும்ம பிஸ்மிக அமூத்து வ அஹ்யா

பொருள் : யா அல்லாஹ்! உனது திருநாமத்தைக் கொண்டு நான் மரணிக்கின்றேன். உனது நாட்டத்தைக் கொண்டே ஜீவித்தெழுவேன்.

தூக்கத்திலிருந்து விழித்ததும் ஓதும் துஆ

اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِيْ أَحْيَانَا بَعْدَ مَا أَمَاتَنَا
وَإِلَيْهِ النُّشُوْرُ

அல்ஹம்துலில்லாஹில்லதீ அஹ்யானா பஃதமா அமாதனா வஇலய்ஹிந் நுஷுர்.

பொருள் : புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே. அவன் நம்மை தூங்கச் செய்து பிறகு விழிக்கச் செய்தான். இன்னும் அவன் பக்கமே நாமனைவரும் போய்ச் சேரவேண்டியவர்கள்.

(புகாரி, முஸ்லிம்)

மலஜலம் கழிக்கும் போது

மலஜலம் கழிக்கச் செல்லும் போது கழிப்பறையினுள் இடது காலை முன் வைத்து கீழ்காணும் துஆவை ஓதவும்.

اَللّٰهُمَّ إِنِّيْ أَعُوْذُ بِكَ مِنَ الْخُبُثِ وَالْخَبَائِثِ

அல்லாஹும்ம இன்னீ அஊது பிக மினல் குப்தி வல் கபாஇஸி.

பொருள் : அல்லாஹ்வின் திருநாமத்தைக் கொண்டு ஆரம்பிக்கிறேன். யா அல்லாஹ்! நிச்சயம் நான் ஆண், பெண் ஜின்களின் கெடுதிகளை விட்டும் உன்னிடம் பாதுகாவல் தேடுகிறேன்.

மலஜலம் கழித்து விட்டு வெளியே வரும் போது

غُفْرَانَكَ اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِيْٓ اَذْهَبَ عَنِّيْ الْاَذٰى وَعَافَانِيْ

குப்ரானக அல்ஹம்துலில்லாஹில்லதீ அத்ஹப அன்னில் அதாவஆபானீ.

பொருள் : யா அல்லாஹ்! நீ பாவத்தை மன்னிப்பதைக் கேட்கிறேன். எனது வயிற்றில் வேதனை செய்யக்கூடிய அசுத்தங்களை வெளியாக்கி, எனது கஷ்டங்களை நீக்கி சுகத்தைத் தந்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்.

உணவு உண்ண ஆரம்பிக்கும் போது

بِسْمِ اللّٰهِ وَعَلٰى بَرَكَةِ اللّٰهِ

பிஸ்மில்லாஹி வஅலா பரகதில்லாஹி

பொருள் : அல்லாஹ்வின் திருநாமத்தைக் கொண்டும் அவனது பரக்கத்தைக் கொண்டும் (சாப்பிட) ஆரம்பிக்கிறேன்.

உண்ணும் போது ஆரம்பத்தில் பிஸ்மில்லாஹ் சொல்ல மறந்துவிட்டால்

بِسْمِ اللّٰهِ اَوَّلَهٗ وَاٰخِرَهٗ

பிஸ்மில்லாஹி அவ்வலஹூவ ஆகிரஹூ

பொருள் : அல்லாஹ்வின் திருநாமத்தை இதன் ஆரம்பத்திலும் முடிவிலும் கூறுகிறேன்.

உணவருந்திய பிறகு ஓதும் துஆ

اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِيْٓ اَطْعَمَنَا وَسَقَانَا وَجَعَلَنَا مِنَ الْمُسْلِمِيْنَ ؕ

அல்ஹம்து லில்லாஹில்லதீ அத்அமனா வஸகானா வஜஅலனா மினல் முஸ்லிமீன்

பொருள் : எங்களுக்கு உணவை அளித்து, பருகும் பானங்களையும் கொடுத்து, எங்களை முஸ்லிம்களினின்றும் உண்டாக்கி வைத்த அல்லாஹ்வுக்கே சகல புகழும்.

"எவர்கள் இந்த துஆவை சாப்பிட்ட பிறகு வழமையாக ஓதி வருவாரோ அவர் ஈமானுடன் மரணமெய்துவார் என்பதற்கு நான் உத்தரவாதம் அளிக்கிறேன். ஏனெனில் அல்லாஹ் அளித்த உணவிற்காகவும், பானத்திற்காகவும், ஈமானுக்காகவும் ஒருவர் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்திக் கொண்டிருக்க அவரை அவன் ஈமான் இல்லாமல் மரிக்கச் செய்வான் என நான் எதிர்பார்க்கவில்லை" என்று இமாம் அபூஹனீபா (ரஹ்) அவர்கள் கூறினார்கள்.

பிரயாணத்தை நாடியதும் ஓதும் துஆ

اَللّٰهُمَّ بِكَ اَصُوْلُ وَبِكَ اَحُوْلُ وَبِكَ اَسِيْرُ

அல்லாஹும்ம பிக அஸூலு வபிக அஹூலு வபிக அஸீரு.

பொருள் : யா அல்லாஹ்! உன்னுடைய உதவியைக் கொண்டு பிரயாணத்தைத் துவங்குகிறேன். இன்னும் உனது உதவியைக் கொண்டே வீடு திரும்புவேன். மேலும் உனது உதவியைக் கொண்டே பிரயாணப்படுகிறேன்.

(ஹிஸ்னுல் ஹஸீன்)

பிரயாணத்தை துவங்கும் முன் தனது வீட்டில் இரண்டு ரக்அத் நபில் தொழுவது முஸ்தஹப்பு

வாகனத்தில் அமர்ந்தவுடன் ஓதும் துஆ

سُبْحَانَ الَّذِي سَخَّرَ لَنَا هَٰذَا وَمَا كُنَّا لَهُ
مُقْرِنِينَ وَإِنَّا إِلَىٰ رَبِّنَا لَمُنْقَلِبُونَ

ஸுப்ஹானல்லதீ சKHஹ் ஹரலனா ஹாதா வமா குன்னா லஹூ முQக்ரினீன் வ இன்னா இலாரப்பினா லமுன்Qகலிபூன்

பொருள் : எங்களுடைய சக்திக்கு வசப்படுத்த முடியாத இதை (இந்த வாகனத்தை) எங்களுக்கு வசப்படுத்திக் கொடுத்த அல்லாஹ்வை தூய்மைப்படுத்துகிறோம். மேலும் நாம் அனைவரும் நம் இரட்சகன் பால் மீளக்கூடியவர்களே.

கடன் சுமை நீங்க ஓதும் துஆ

اَللّٰهُمَّ اكْفِنِيْ بِحَلَالِكَ عَنْ حَرَامِكَ
وَاَغْنِنِيْ بِفَضْلِكَ عَمَّنْ سِوَاكَ

அல்லாஹும்மக்பினீ பிஹலாலிக அன்ஹராமிக வஅங்னினீபிபள்லிக அம்மன் ஸிவாக.

பொருள் : யா அல்லாஹ்! என்னை ஹராமை விட்டும் காப்பாற்றி ஹலாலானவைகளைக் கொண்டு எனக்குப் போதுமாக்கி வைப்பாயாக! மேலும் உன் நன்கொடையைக் கொண்டு உன்னையல்லாத வேறு எவரிடமும் தேவையாக்கி விடாதே!

தூக்கத்தின் ஒழுக்கம்

1. ஒளுவுடன் இருக்கவேண்டும்.
2. படுக்கையை மூன்று முறை உதறவேண்டும்.
3. படுக்கையிலமர்ந்து ஸூரா பாத்திஹா ஒரு தடவை, குல்ஹுவல்லாஹு ஸூரா 3 தடவை, குல்அஊது பிரப்பில் பலக் 3 அல்லது ஒரு தடவை, குல்அஊது பிரப்பின்னாஸ் 3 அல்லது ஒரு தடவை ஓதி இரு உள்ளங்கைகளிலும் ஊதி, உடம்பு பூராவும் மூன்றுமுறை தடவிக் கொள்ளவேண்டும். குதிகால்களிலும் மர்ம ஸ்தானத்திலும் தடவ வேண்டியதில்லை.
4. பிறகு குல்யா அய்யுஹல் காபிரூன் ஸூரா ஒரு தடவை, ஆயத்துல் குர்ஸீ ஒரு தடவை, ஆமனர் ரஸூல் ஒரு தடவை ஓதவும்.
5. பிறகு,

   سُبْحَانَ اللّٰهِ

   ஸுப்ஹானல்லாஹ் 33 தடவைகள்,

   اَلْحَمْدُ لِلّٰهِ

   அல்ஹம்துலில்லாஹ் 33 தடவைகள்,

   اَللّٰهُ اَكْبَرُ

   அல்லாஹு அக்பர் 34 தடவைகள் ஓதிக் கொள்ளவும்;
6. சிறிது நேரம் கண்களை மூடிக் கொண்டு அன்று செய்த நல்ல, கெட்ட செயல்களையும், மவ்த்தைப் பற்றியும், கப்ருடைய வாழ்க்கையைப் பற்றியும் சிந்திக்கவேண்டும்.

7. தஹஜ்ஜுத் தொழுகைக்கு எழுந்திருப்பதற்கு நிய்யத்து செய்யவேண்டும்.

8. இரு கண்களுக்கும் மும்மூன்று முறைகள் சுர்மா இட்டுக் கொள்ளவேண்டும்.

9. துஆவை ஓதி வலது கன்னத்தில், வலது கையை வைத்து கிப்லாவின் பக்கம் முகத்தைத் திருப்பி வைத்து படுத்துக் கொள்ளவேண்டும்.

10. வடக்கு பக்கம் அல்லது மேற்குப் பக்கம் தலையை வைத்துக் கொள்ளலாம். வடக்கு பக்கம் தலையை வைப்பது தான் சிறந்தது.

11. படுக்கையிலிருந்து எழும் சமயம் துஆ ஓதிக் கொள்ள வேண்டும்.

குறிப்பு : இரவு தூங்குவதற்கு முன் ஸூரா அலிப் லாம் மீம் ஸஜ்தா, ஸூரா தபாரக் இவற்றை ஓதுவதினால் பல சிறப்புகளுண்டு. இரவு நேரங்களில் வாகிஆ ஸூரா ஓதுவதும் சிறந்தது.

மலஜலம் கழிக்கும் போது கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கங்கள்

1. காலணிகள் அணிந்திருக்கவேண்டும்.
2. தலையை மறைத்துக் கொள்ளவேண்டும்.
3. குர்ஆன், ஹதீஸ்கள், அல்லாஹ், ரஸூலுடைய திருநாமங்கள் எழுதப்பட்டவற்றை உடன் வைத்துக் கொள்ளக் கூடாது.
4. இடது காலை முன் வைத்து துஆவை ஓதிக் கொண்டு நுழைய வேண்டும்.

5. ஆடைகளை ஒரே நேரத்தில் பூரணமாக உயர்த்தாமல் சிறுகச் சிறுகு உயர்த்தவேண்டும்.
6. மலஜலம் கழிக்கும் போது திக்ர் செய்வதோ, குர்ஆன் ஓதுவதோ கூடாது. மேலும் பேசவும் கூடாது.
7. மலஜலம் கழிக்கும் போது இடது காலின் மீது பாரம் இருக்குமாறு சாய்ந்து உட்கார வேண்டும்.
8. கிப்லாவை முன்னோக்குவது கூடாது. நிர்பந்தத்தின் காரணமாக அவ்வாறிருக்க நேர்ந்தால் மூன்று முழத்திற்குள் திரை இருக்கவேண்டும். இவ்வாறு செய்வது மக்ரூஹ் ஆகும். இயலாத நேரத்தில் செய்து கொள்ளலாம். ஆனால் கிப்லாவின் பக்கம் திரை இல்லாமலிருப்பது ஹராம் (விலக்கப்பட்டது).
9. பலன் தரக்கூடிய மரங்களுக்கு சமீபத்திலும், மக்கள் நடமாக்கூடிய இடங்களிலும், பொந்துகளிலும் மலஜலம் கழிக்கக் கூடாது.
10. வியாதியஸ்தர்கள், இயலாதவர்களைத் தவிர மற்றவர்கள் நின்று கொண்டு மலஜலம் கழிக்கக் கூடாது.
11. டேலாவினால் மட்டும் சுத்தம் செய்வதாக இருந்தால் மூன்று டேலாவைக் கொண்டு சுத்தம் செய்யவேண்டும்.
12. டேலாக் கட்டி, தண்ணீர் இவை இரண்டையும் கொண்டு சுத்தம் செய்வது ஏற்றம்.
13. நீண்ட நேரம் தேவையில்லாமல் உட்காரக்கூடாது.

குறிப்பு : டேலாவினால் மட்டும் சுத்தம் செய்திருந்தால் தன்னுடைய மனைவியுடன் சேர்க்கை செய்வது கூடாது என்று ஷாபியீ நூற்களில் காணப்படுகிறது.

இதன் மற்ற விபரங்களை 'பிக்ஹின் அறிவுக் களஞ்சியம்' (ஷாபியீ - ஹனபி) என்ற நூலில் பார்த்துக் கொள்ளவும்.

சாப்பாட்டின் ஒழுக்கங்கள்

1. சாப்பிடும் முன்பும் சாப்பிட்ட பின்பும் இரு கைகளையும் கழுவி வாய் கொப்பளிக்கவேண்டும்.
2. தஸ்தர்கான் (விரிப்பு) விரிக்கவேண்டும்.
3. சாப்பிடும் முன்பு 'இந்த உணவை அல்லாஹ்தான் அளித்தான். எனவே இந்த உணவின் மூலம் கிடைக்கும் சக்தியை அல்லாஹ்வின் வழியிலேயே செலவு செய்வேன்' என்ற நிய்யத்து வைக்கவேண்டும்.
4. பிறகு துஆ ஓதி சாப்பிட ஆரம்பிக்கவேண்டும்.
5. சாப்பிடும் பொழுது முன் பகுதியில் ஓரமாக சிறுசிறு பிடியாக சாப்பிடவேண்டும்.
6. ஒரு பாத்திரத்தில் பலர் சேர்ந்து சாப்பிடுவது ஏற்றமானது.
7. பலர் சேர்ந்து சாப்பிடும் பொழுது தனக்கு முன்னாலுள்ளதை சாப்பிட வேண்டும். ஆனால் பல தரப்பட்ட உணவுகள் அப்பாத்திரத்திலிருந்தால் தன் மனம் விரும்பியதை எடுத்துச் சாப்பிடலாம். மேலும் தன்னுடன் சேர்ந்து சாப்பிடக்கூடியவர்களும் திருப்தியாக சாப்பிடுவதை கவனித்துச் சாப்பிட வேண்டும்.
8. சாப்பிடும் பொழுது தண்ணீர் பருக நேர்ந்தால் இடது கையில் தாங்கி வலது கையினால் தண்ணீரைப் பருகவேண்டும்.

9. வலது கையினால் சாப்பிடவேண்டும்.
10. சாப்பிடும் பொழுது உணவுப் பொருள்கள் கீழே விழுந்தால் உடனே எடுத்து உட்கொள்ளவேண்டும்.
11. பாத்திரத்தில் வைக்கப்பட்ட உணவுகளில் தனக்கு பிடித்தமில்லாதவையிருந்தால் மௌனமாக இருந்து விடவேண்டும். மேலும் உணவிலுள்ள குறைகளை வெளிப்படுத்தக் கூடாது.
12. இருவரோ அல்லது அதற்கதிகமான நபர்களோ சேர்ந்து உணவருந்தும் பொழுது, தனக்கு உணவு போதுமென்று இருந்தாலும் மற்றவர்கள் சாப்பிட்டு முடியும் முன்பு எழுந்திருக்கக் கூடாது. முன்னதாகவே எழுந்திருக்க வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டால் மற்றவர்களிடம் அனுமதி வாங்கி எழுந்திருக்க வேண்டும்.
13. மிகவும் சூடுள்ள உணவுகளை உட்கொள்ளக் கூடாது.
14. அத்தஹிய்யாத்து இருப்பு இருத்தல், இடது காலின் பாதத்தின் மீது இடது புட்டத்தை வைத்து, வலது காலை உயர்த்தி வைத்து இருத்தல் அல்லது குந்தி இருத்தல் ஆகிய ஏதேனுமொரு முறையில் அமர்ந்து உணவு உட்கொள்வது தான் சிறந்தது.
15. நாற்காலியின் மீதமர்ந்தோ மேஜையின் மீது வைத்தோ உணவு உட்கொள்ளுதல் சுன்னத்திற்கு மாற்றமானது.
16. உணவு உட்கொள்ளும் பொழுது இடையிடையே விரல்களை சூப்புவதும், மேலும் கையை ஊன்றிக் கொள்வதும் சிறந்ததல்ல.
17. பள்ளிகளில் பச்சை வெங்காயம் சாப்பிடுவதும் முறையல்ல. மேலும் பள்ளிக்கு வெளியே பச்சை

வெங்காயம் சாப்பிட்டிருந்தாலும், அதனுடைய வாடையை நீக்கி விட்டு பள்ளியினுள் பிரவேசிக்கவேண்டும்.

18. உணவு உட்கொண்ட பிறகு விரல்களை சூப்பி பாத்திரத்தையும் வழித்து சாப்பிடவேண்டும். மேலும் துஆ ஓதிக் கொள்ளவேண்டும்.

19. சாப்பிட்டு முடிந்ததும் முதலில் உணவு வகைகளையும், விரிப்பையும் (தஸ்தர்கான்) எடுக்கவேண்டும். மேலும் தஸ்தர்கானை எடுத்த பிறகுதான் உணவு உட்கொண்டவர்கள் எழுந்திருக்கவேண்டும்.

20. உணவருந்தும் முன்பும் உணவருந்திய பின்பும் சிறிது உப்பை உட்கொள்வதும் சிறந்ததென்று சில பெரியோர்களால் கூறப்பட்டிருக்கிறது.

சிறப்பு : உணவு உட்கொள்ளும் முன்பு 'பிஸ்மில்லாஹ்' சொல்லாவிட்டால் ஷைத்தானும் சேர்ந்து சாப்பிடுகிறான். 'பிஸ்மில்லாஹ்' கூற மறந்தவர்கள் பிஸ்மில்லாஹி அவ்வலஹூ வ ஆகிரஹூ என்று இடையில் கூறிவிட்டால் ஷைத்தான் சாப்பிட்டதை வாந்தி எடுத்து விடுகிறான். மேலும் உணவு வைக்கப்பட்ட பாத்திரத்தின் நடுவில் ரஹ்மத் இறங்குவதால் சாப்பிட்டால் ஓரமாக சாப்பிடவேண்டும். உணவு பாத்திரத்தை விரிப்பின் மீது வைத்து சாப்பிடுவதின் காரணமாக 'பர(க்)கத்' உண்டாகிறது. மேலும் கீழே விழும் உணவை எடுத்துச் சாப்பிட்டால் ஸாலிஹான (நற்கிரியை புரியும்) குழந்தை பிறக்கும். உட்கொண்டிருக்கும் உணவைப் பாத்திரத்தில் மீதம் வைத்தால் அது ஷைத்தானுக்கு உணவாகி விடும். நாயகம் ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்கள் சாப்பிட்ட பாத்திரதைப் பார்த்தால்

சாப்பிட்ட அடையாளமே தெரியாது. அவ்வளவு சுத்தமாக இருக்கும் மேலும் அவர்கள் சாப்பிட்ட பிறகு விரல்கள் சிவக்குமளவு அவ்விரல்களை சூப்புவார்கள். மேலும் விரல்களை சூப்புவதினால் குறைவாக சாப்பிட்டிருந்தாலும் நிறைவு ஏற்படும். அதிகமாக சாப்பிட்டிருந்தாலும் அது ஜீரணித்து விடும்.

உணவருந்தும் பொழுது ஒவ்வொரு கவளத்தை வாயில் வைக்கும் பொழுதும்,

ஸுப்ஹானல்லாஹ் என்றும்,

பொருள் : அல்லாஹ் மிகவும் பரிசுத்தமானவன்.

ஒவ்வொரு கவளம் உணவை விழுங்கியதும்,

அல்ஹம்துலில்லாஹ் என்றும்

(பொருள் : புகழனைத்தும் அல்லாஹ்விற்கு) கூறுவதினால் நிறைந்த நன்மைகளுண்டு. உணவருந்தும் முன்பும், பின்பும் சிறிது உப்பை உட்கொள்வதினால் பல வியாதிகள் பீடிக்காதென்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

உணவருந்தும் சமயம் இடையிடையே,

"அல்லாஹும்ம ல(க்)கல் ஹம்து வல(க்)கஷ்ஷுக்ரு"

(பொருள் : அல்லாஹ்வே! உனக்கே புகழ். இன்னும் உனக்கே நன்றி) என்று கூறுவதினால் ஒரு நபிலான - ஏற்றுக் கொள்ளப்பட்ட நோன்பின் நன்மையுண்டு என்று கூறப்படுகிறது.

❖ ❖ ❖

முஸ்லிம்களாகிய நமக்குள் ஏன் நாம் ஈமானின் பக்கம் அழைப்பு கொடுக்க வேண்டும்

குர்ஆன் வசனங்கள்

விசுவாசிகள் ஒட்டு மொத்தமாக (ஊரைவிட்டு) புறப்பட்டுச் செல்லலாகாது. அவர்களில் ஒவ்வொரு கூட்டத்திலிருந்தும் ஒரு சிறிய கூட்டத்தார் மார்க்கத்தை விளங்கி கொள்வதற்காகவும் இன்னும் அவர்களின் கூட்டத்தார் அவர்கள்பால் திரும்பி விடும்பொழுது அச்சமூட்டி எச்சரிக்கை செய்வதற்காகவும் அவர்கள் புறப்பட்டுச் செல்ல வேண்டாமா (அதன் மூலம் அவர்கள் தீயவைகளை தவிர்த்து கொள்ளலாம்). *அத்தியாயம் : 9-122*

நீங்கள் அச்சமூட்டி எச்சரிக்கை செய்வதெல்லாம் (குர்ஆனாகிய) நல்லுபதேசத்தைப் பின்பற்றி மறைவில் அர்ரஹ்மானை அஞ்சுகிறாரே அவருக்குத்தான். ஆகவே அத்தகையவருக்கு மன்னிப்பைக் கொண்டும், கண்ணியமான கூலியைக் கொண்டும் நீர் நன்மாராயம் கூறுவீராக.

அத்தியாயம் : 36-11

விசுவாசம் கொண்டோரே! (தீனுக்கு உதவுவதன் மூலம்) நீங்கள் அல்லாஹ்வுக்கு உதவி செய்தால் அவன் உங்களுக்கு உதவி செய்வான். மேலும் உங்களுடைய பாதங்களை நிலைபெறச் செய்வான். *அத்தியாயம் : 47-7*

காலத்தின் மீது சத்தியமாக, நிச்சயமாக மனிதன் நஷ்டத்தில் இருக்கிறான். விசுவாசம் கொண்டு நற்கருமங்களையும் செய்து சத்தியத்தை ஒவருவருக்கொருவர் உபதேசம் செய்தும் (பாவங்களை

விடுவதிலும் நன்மைகளைச் செய்வதிலும் ஏற்படும் கஷ்டங்களை சகித்து) பொறுமையைக் கொண்டும் ஒருவருக்கொருவர் உபதேசிக்கிறார்களே அத்தகையோரைத் தவிர. *அத்தியாயம் : 103-1.2.3*

இன்னும் (விசுவாசங் கொண்டோரே) உங்களில் ஒரு கூட்டத்தார் அவர்கள் (மனிதர்களை) நன்மையின்பால் அழைக்கின்றவர்களாகவும் நல்லதைக் கொண்டு (மக்களை) ஏவுகின்றவர்களாகவும், தீய செயல்களிலிருந்து (அவர்களை) விலக்குகின்றவர்களாகவும் இருப்பார்கள். அவர்கள் தாம் வெற்றியாளர்கள். *அத்தியாயம் : 3-104*

(விசுவாசங்கொண்டோரே!) மனிதர்களுக்காக தோற்றுவிக்கப் பட்ட (சமுதாயத்தார்களிலெல்லாம்) மிக்க மேன்மையான சமுதாயமாக நீங்கள் இருக்கின்றீர்கள். (ஏனெனில்) நன்மையான காரியத்தை நீங்கள் ஏவுகிறீர்கள். மேலும் நீங்கள் அல்லாஹ்வை விசுவாசிக்கிறீர்கள். மேலும் (இவ்வாறே) வேதத்தையுடையவர்களும் விசுவாசித்து (நடந்தால்) அது அவர்களுக்கு நன்மையாக இருந்திருக்கும். விசுவாசிப்போரும் அவர்களில் (சிலர்) இருக்கின்றனர். இன்னும் அவர்களில் அதிகமானவர்கள் (அல்லாஹ்வின்) கட்டளையை மீறும் பாவிகளாவார்கள். *அத்தியாயம் : 3-110*

அல்லாஹ்வையும், இறுதி நாளையும் அவர்கள் விசுவாசிக்கின்றனர். இன்னும் நன்மையைக் கொண்டும் (மனிதர்களை) ஏவுகின்றனர். தீமையை விட்டும் தடுக்கின்றனர். இன்னும் நன்மையானவற்றில் விரைந்தும் செல்கின்றனர். மேலும் இவர்கள் நல்லோர்களில் உள்ளோராவார். *அத்தியாயம் : 3-114*

எவர் அல்லாஹ்வின் பால் (மனிதர்களை) அழைத்து, நற்கருமங்களையும் செய்து, நிச்சயமாக நான்

எவர் அல்லாஹ்வுடைய தூதருக்கு (முற்றிலும்) கீழ்படிந்து நடக்கிறாரோ அவர் நிச்சயமாக அல்லாஹ்வுக்கு கீழ்படிந்துவிட்டார். இவ்வாறு கீழ்படிவதை எவரும் புறக்கணித்தால் அது பற்றி நீர் கவலைப்படாதீர். ஏனெனில் உம்மை அவர்கள் மீது கண்காணிப்பவராக நாம் அனுப்பவில்லை.

அத்தியாயம் 4:80

(நபியே!) நீர் கூறுவீராக! மனிதர்களே! நிச்சயமாக நான் உங்கள் அனைவரின் பாலும் (அனுப்பப்பட்ட) அல்லாஹ்வின் தூதராக இருக்கிறேன். அவன் எத்தகையவன் என்றால் வானங்கள், பூமியின் ஆட்சி அவனுக்குரியது. அவனைத் தவிர நாயன் எவருமில்லை. அவனே மரணிக்கச் செய்கிறான். ஆகவே உம்மி நபியான அவனுடைய ரசூலை கொண்டு ஈமான் கொள்ளுங்கள். அவர் எத்தகையவர் என்றால் அல்லாஹ்வையும் அவனுடைய வசனங்களையும், விசுவாசிக்கின்றார். நேர்வழி பெறுவதற்காக அவரை நீங்கள் பின்பற்றுங்கள்.

அத்தியாயம் 7:158

மூஃமின்களே, அல்லாஹ்வுக்கும் அவனுடைய ரசூலுக்கும் நீங்கள் கீழ்படியுங்கள். அவருடைய போதனைகளை செவியுறுகிற நிலையில் அவருடைய கட்டளைக்கு மாறு செய்து அவரை விட்டும் திரும்பிவிடாதீர்கள்.

அத்தியாயம் 8:20

நிச்சயமாக எவர் அல்லாஹ்வுக்கும் அவருடைய தூதருக்கும் மாறு செய்கிறாரோ, நிச்சயமாக அவருக்கு நரக நெருப்பு உண்டு அதில் அவர் நிரந்தரமாக தங்கியிருப்பார், என்பதை அவர்கள் அறிந்து கொள்ளவில்லையா, இது மகத்தான இழிவாகும்.

அத்தியாயம் 9:63

விசுவாசம் கொண்ட ஆண்களும், விசுவாசம் கொண்ட பெண்களும், அவர்களில் சிலர், சிலருக்கு உற்ற காரியஸ்தர்களாக இருக்கின்றனர். அவர்கள் பிறரை நன்மையைக் கொண்டு ஏவுகிறார்கள். (மார்க்கத்தில் தடுக்கப்பட்ட) தீமையை விட்டும் தடுக்கின்றார்கள். தொழுகையை நிறைவேற்றுகிறார்கள். ஜகாத்தையும் கொடுத்து வருகிறார்கள். அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் கீழ்படிந்து நடக்கிறார்கள். நிச்சயமாக அல்லாஹ் அவர்களுக்கு அருள்புரிவான். அல்லாஹ் யாவரையும் மிகைத்தவன் தீர்க்கமான அறிவுடையவன். *அத்தியாயம் 9:71*

உங்களுக்கு மத்தியில் சிலர் சிலரை(ப் பெயர்கூறி) அழைப்பது போன்று அல்லாஹ்வின் தூதரின் அழைப்பை (முஹம்மதே என்று கூறி) ஆக்கிக் கொள்ளாதீர்கள். நிச்சயமாக உங்களில் (கூட்டத்திலிருந்து) மறைவாக நழுவி விடுகிறார்களே அத்தகையவர்களை, அல்லாஹ் அறிவான். ஆகவே (நம் தூதராகிய) அவருடைய கட்டளைக்கு மாறு செய்கிறார்களே அத்தகையவர்கள் (உலகில்) தங்களுக்கு யாதொரு துன்பம் பிடித்து விடுவதையோ அல்லது துன்புறுத்தும் வேதனை பிடித்து விடுவதையோ பயந்து கொண்டிருக்கவும்.

அத்தியாயம் 24:63

நபியே! நிச்சயமாக நாம் உம்மை (மனிதர்களுக்கு) சாட்சியாளராகவும், நற்செய்தி கூறுபவராகவும், அச்சமூட்டி எச்சரிப்பவராகவும் (உம்மை) நாம் அனுப்பியுள்ளோம்.

அத்தியாயம் 33:45

மேலும் அல்லாஹ்வின் பக்கம் அவனுடைய அனுமதி கொண்டு ஜனங்களை அழைப்பவராகவும், பிரகாசிக்கும் விளக்காகவும் (உம்மை) நாம் அனுப்பியுள்ளோம்.

அத்தியாயம் 33-46

அவர் தன் மன விருப்பப்படி எதையும் பேசுவதும் இல்லை.
அத்தியாயம் 53:3

அது அறிவிக்கப்படுகிற வஹியைத் தவிர வேறு இல்லை.
அத்தியாயம் 53:4

வல்லமை மிக்க (ஜிப்ரயிலான)வர் (அவருக்கு) அதனை கற்றுக் கொடுத்தார்.
அத்தியாயம் 53:5

(அவர்) உறுதியானவர். பின்னர் அவர் தம் இயற்கை உருவில் நம் ரசூல் முன் நேராக நின்றார்.
அத்தியாயம் 53:6

உங்களில் அல்லாஹ்வையும், மறுமை நாளையும் ஆதரவு வைத்து அல்லாஹ்வை அதிகமாக நினைவு கூர்பவராக இருப்பவருக்கு அல்லாஹ்வின் தூதரில் திட்டமாக அழகிய முன்மாதிரி இருக்கிறது.
அத்தியாயம் 33:21

அன்றியும், உங்களில் எவர் அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும் கீழ்படிந்து நற்கருமங்களையும் செய்கிறாரோ, அவருக்குரிய (நற்)கூலியை அவருக்கு நாம் இருமுறை தருவோம். இன்னும் அவருக்கு (சுவனத்தில்) மிக்க கண்ணியமான உணவை நாம் தயார்படுத்து வைத்திருக்கின்றோம்.
அத்தியாயம் 33:31

அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் யாதொரு காரியத்தை முடிவெடுத்துவிட்டால் அவர்களுடைய அக்காரியத்தில் சுயமாக வேறு அபிப்பிராயம் கொள்வதற்கு விசுவாசியான எந்த ஆணுக்கும், விசுவாசியான எந்த பெண்ணுக்கும் உரிமையில்லை. (அதில்) அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் எவர் மாறு செய்கின்றாரோ அவர் பகிரங்கமான வழிகேடாக திட்டமாக வழிகெட்டுவிட்டார்.
அத்தியாயம் 33:69

நிச்சயமாக அல்லாஹ்வையும், அவனுடைய தூதரையும் துன்புறுத்துகிறார்களோ அத்தகையோர் அவர்களை அல்லாஹ் இம்மையிலும், மறுமையிலும் சபித்துவிட்டான். இழிவு தரும் வேதனையையும் தயார் செய்து வைத்திருக்கின்றான்.
அத்தியாயம் 33:57

(உண்மையை) அவர்கள் நிராகரித்து என்னுடைய வசனங்களையும், என்னுடைய தூதர்களையும் பரிகாசமாக எடுத்துக் கொண்டதன் காரணமாக அதுவே அவர்களின் கூலி நரகமாகும்.
அத்தியாயம் 18:106

அவர்களுடைய முகங்கள் (நரக) நெருப்பில் புரட்டப்படும் நாளில் நாங்கள் அல்லாஹ்வுக்கு வழிபட்டிருக்க வேண்டுமே (அவனுடைய) தூதருக்கும் கீழ்படிந்திருக்க வேண்டுமே என்று கூறுவார்கள்.
அத்தியாயம் 33:66

அல்லாஹ் விசுவாசிகளின் மீது அவர்களில் ஒரு தூதரையும் (அதுவும்) அவர்களிலிருந்தே அவன் அனுப்பிவைத்த சமயத்தில் திட்டமாக பேரருள் செய்துவிட்டான். அவர் அவர்களுக்கு அவனுடைய வசனங்களை ஓதிக் காண்பித்து அவர்களை (பாவத்திலிருந்து) பரிசுத்தமாக்கியும் வைக்கின்றார். அவர்களுக்கு வேதத்தையும் (குர்ஆனையும்), ஞானத்தையும் (சுன்னத்தையும்) கற்றுக் கொடுக்கிறார். நிச்சயமாக அவர்கள் இதற்கு முன் பகிரங்கமான வழிகேட்டிலேயே இருந்தனர்.
அத்தியாயம் 3:164

அல்லாஹ்வுக்கும், (அவனுடைய) தூதருக்கும் கீழ்படியுங்கள். (அதனால்) நீங்கள் (அல்லாஹ்வின்) கிருபைக்குள்ளாக்கப்படுவீர்கள்.
அத்தியாயம் 3:132

(விசுவாசிகளே!) உங்களிலிருந்தே திட்டமாக ஒரு தூதர் உங்களிடம் வந்திருக்கின்றார். (உங்களுக்கு யாதொரு துன்பம் ஏற்பட்டு) நீங்கள் கஷ்டப்படுவது அவருக்கு மிக வருத்தமாக இருக்கும். உங்கள் மீது பேராசை கொண்டவர். விசுவாசிகளோடு மிக இரக்கமுள்ளவர். மிகக் கிருபையுடையவர்.

அத்தியாயம் 9:128

(நபியே, இதற்கு) பின்னரும் அவர்கள் (உம்மை ஏற்காது விலகிக் கொண்டால் (அவர்களிடம் நீர் கூறுவீராக, அல்லாஹ்வே எனக்குப் போதுமானவன். அவனைத்தவிர வணக்கத்திற்குரிய (வேறு) நாயனில்லை. அவன் மீது (என் காரியங்களை ஒப்படைத்து (முழுமையாக) நம்பிக்கை வைத்துள்ளேன். அவனே மகத்தான அர்ஷின் அதிபதியாவான்.

அத்தியாயம் 9:129

மேலும் (நபியே!) உம்மை மனிதர்கள் அனைவருக்கும் நன்மாராயம் கூறுபவராகவும், அச்சமூட்டி- எச்சரிக்கை செய்பவராகவுமேயன்றி நாம் அனுப்பவில்லை. எனினும் மனிதர்களில் பெரும்பாலோர் (இதனை) அறிந்து கொள்ளமாட்டார்கள்.

அத்தியாயம் 34:28

(எனவே) அல்லாஹ்வுக்கு நீங்கள் வழிபடுங்கள் (அவன்) ரசூலுக்கும் பணிந்து நடங்கள். எனினும் நீங்கள் புறக்கணித்தால் அதனால் அவருக்கு குறையில்லை. நம்முடைய ரசூல் மீது (கடமையாக) உள்ளதெல்லாம் நம் தூதை தெளிவாக எத்தி வைப்பது தான். *அத்தியாயம் 64:12*

❖ ❖ ❖

இந்நூலை அச்சிட்டு வினியோகிக்க விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

ஆசியா கிராபிக்ஸ்

ஆப்செட் பிரிண்டர்ஸ், பப்ளிஷர்ஸ் & புக் செல்லர்ஸ்

8, மயிலை பொன்னுசாமி தெரு, சென்னை - 4 போன் : 25271365

1. ஈமான் - கடலைப் போன்றது
2. தொழுகை - மழையைப் போன்றது
3. இல்மு, திக்ரு- பூமியின் அடியில் உள்ள நீரைப் போன்றது.
4. இக்ராம் - குளத்து நீரைப் போன்றது.
5. இக்லாஸ் - கிணற்று நீரைப் போன்றது.
6. தஃவத் - ஆற்று நீரைப் போன்றது.

தேவையற்றவைகளை தவிர்த்தல் என்பது அசுத்த நீரை தவிர்ப்பது போன்றதாகும்.

1. உள்ளம் - பூமியைப் போன்றது.
2. ஈமான் - விதையைப் போன்றது.
3. தொழுகை - மரத்தைப் போன்றது.
4. இல்மு - தண்ணீரைப் போன்றது.
5. திக்ரு - வேலியைப் போன்றது.
6. இக்ராம் - பூவைப் போன்றது.
7. இக்லாஸ் - இனிக்கும் பழத்தைப் போன்றது.
8. தஃவத் - பழுத்தை உலகெங்கும் விநியோகிக்க வேண்டியது